பெயர்: .......................... தேதி: ..........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

பகுதி_3

**சான்று:-** நம் உடலுக்கு சக்தி உணவின் மூலம் கிடைக்கிறது.

- ☐ நீரின் மூலம் நம் உடலுக்கு சக்தி கிடைக்கிறதா?
- ☑ நம் உடலுக்கு சக்தி எப்படிக் கிடைக்கிறது?
- ☐ எந்தெந்த உணவின் மூலம் உடலுக்கு சக்தி கிடைக்கிறது?

1. நிலவில் நடந்த முதல் மனிதன் ஆம்ஸ்ட்ராங்.

- ☐ மனிதன் நிலவில் நடந்தானா?
- ☐ நிலவில் முதல் மனிதன் எங்கே நடந்தான்?
- ☐ நிலவில் நடந்த முதல் மனிதன் யார்?

2. இந்திய தேசியக்கொடி மூன்று வண்ணங்களை உடையது.

- ☐ இந்திய தேசியக்கொடி இரண்டு வண்ணங்களைக் கொண்டதா?
- ☐ இந்திய தேசியக்கொடி எத்தனை வண்ணங்களை உடையது?
- ☐ இந்திய தேசியக்கொடியில் அசோகச் சக்கரம் எங்கு உள்ளது?

2. உயிரெழுத்துக்களை குறில் நெடில் எனப் பிரிக்கலாம்.

- ☐ உயிரெழுத்துக்களை எவ்வாறு பிரிக்கலாம்?
- ☐ உயிரெழுத்துக்களில் குறில், நெடில் எழுத்துக்களைக் கூறுக.
- ☐ உயிரெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

4. பாலின் நிறம் வெள்ளை.

- ☐ பாலின் நிறம் என்ன?
- ☐ பால் ஏன் வெள்ளை நிறத்தில் உள்ளது?
- ☐ பாலின் நிறம் மஞ்சளா ?

பெயர்: ........................... தேதி: ...........................

# விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்.

1. இந்திய தபால் தலையில் முதலில் இடம் பெற்றவர் காந்தியடிகள்.

- ☐ இந்திய தபால் தலையில் முதலில் இடம் பெற்றவர்கள் எத்தனை பேர்?
- ☐ இந்திய தபால் தலையில் முதலில் இடம் பெற்றவர் யார்?
- ☐ இந்திய தபால் தலை எங்கு உள்ளது?

2. பூமி சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகிறது.

- ☐ பூமி சூரியனை எப்படிச் சுற்றி வருகிறது?
- ☐ பூமி சூரியனைச் சுற்றிவர எத்தனை நாட்கள் ஆகும்?
- ☐ பூமி சூரியனைச் சுற்றி வருகிறதா?

3. ரோஜாவின் ராஜா என்று அழைக்கப்பட்டவர் ஜவகர்லால் நேரு.

- ☐ நேரு ரோஜாவின் ராஜா என அழைக்கப்பட்டது எப்படி?
- ☐ இந்தியாவின் முதல் பிரதம மந்திரி யார்?
- ☐ ரோஜாவின் ராஜா என்று அழைக்கப்பட்டவர் யார்?

4. பூக்களில் அத்திப்பூ மலராது.

- ☐ பூக்கள் ஏன் மலராது?
- ☐ பூக்களில் எத்தனை பூக்கள் மலராது?
- ☐ பூக்களில் எந்த பூ மலராது?

5. காமராஜர் விருதுநகரில் பிறந்தார்.

- ☐ தமிழ்நாட்டின் முதலமைச்சராக காமராஜர் இருந்தாரா?
- ☐ காமராஜர் எங்கே பிறந்தார்?
- ☐ கருப்புக் காந்தி என்று அழைக்கப்படுபவர் யார்?